உ

சிவமயம்

திரிகோணமலை வில்லூன்றிக்

# கந்தசுவாமி

*ஊஞ்சல், பராக்கு, எச்சரிக்கை, லாலி,*
*மங்களம்.*



இவை

ஷை கோயிலாதீனபூசகர்

**பிரமஸ்ரீ இ. த. பூரணானந்தேஸ்வரக்**
**குருக்களவர்களால்**

யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சகத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

சுபகிருது]    விலை 25 சதம்    [ஐப்பசி

# உபோற்காதம்

திருவேரகம் என்னும் மகா தலத்தில்வாழ்ந்த சிவசுப்பிரமணியசர்மா என்பவர் பூசிக்கும் விருப்பத் தோடு பிரசித்திபெற்ற குமரநாதசிற்பர்மூலமாகப் பஞ்சலோகத்தால் ஸ்ரீ சண்முகமூர்த்தியைத் தேவிமாரோடும் திருவாசியோடும் அமைப்பித்துச் சிற்றுளிவேலை பூரணமாவதன்முன் தைவவசத்தினாற் சிவபதமடைந்தாராக, அவர் சுற்றத்தார் இம் மூர்த்தியை யழித்துவிட வெண்ணிச்சிற்பருக்குணர்த்த, அதற்குள்ளமொருப்படாது வருந்திய சிற்பரது சொப்பனத்திற் பெருமான் வெளிப்பட்டு "நம்மை இலங்கைக்குச் செல்லுங் கப்பலில் ஓர் பெட்டியிற் சேமித்தேற்றி விடுதி" என்றுபணித்தருளியபடியே, பரங்கிப்பேட்டையில் வந்த ஓர் பாய்க்கப்பலிலே மற்றும் பெட்டிகளோடுகலந்தேற்றிவிட, அக்கப்பல் கோணேசர் மலைக்கும் அரிமலைக்குமிடையிலே வந்து காற்றில்லாமையால் ஆறுநாள்வரை ஓடமாட்டாதிருப்பதுகண்டு துக்கத்தோடுறங்கிய கப்பலதிகாரியின் சொற்பனத்திற் பெருமான் தோற்றி, விக்கிரகப் பெட்டியின் அடையாளங் காட்டி, இதைக் கடலிலெடுத்துவிட்டால் இக் கப்பலோடும், இல்லையேல் இவ்விடத்தை விட்டகலாதென்று பணிப்ப, அவன் அவ்வாறு கடலில் விட்டு அப்பாற்போனான்; அப்பெட்டி கடலிலே மிதந்துவர, கந்தசாமிமலைச்சார்பிலேநின்ற கரையூரவர் மூவர் அதனை யெடுத்துத் தாளைநிழலியே வைத்து, பட்டங்கட்டி ஆறுமுகம் என்பவருக்கறிவிக்க, அவர் பெட்டியைப் பிரித்துப்பார்த்து அற்புதமுற்று, சவலைமுதலித் தம்பி என்னும் வேளாண் பிரபுவையழைத்துக் காட்டி, இருவரும் ஆனந்தமுற்று, கந்தசாமிமலைச்சார்பில் முடமரண்டானென்னுமிடத்திலே ஒருகோயிலை அமைத்து அங்

கேதாபித்தனர். அங்கேசுமார் 30 வருடவரை பூசனைநடை பெற, ஒல்லாந்தபிரான்சிய ராசகலகத்தில், பூசகர் பிரம ஸ்ரீ. கணபதிஐயரும் பட்டங்கட்டி ஆறுமுகத்தின்சந்த தியான ஸ்ரீ வேலப்பமணியமும் இம்மூர்த்தியைத்தம் பல கமம் கோணேசர் கோயிலில் வைத்தனர், அங்கே 22 வருடம்வரையிருக்க, அக்கோயிலிற்ருபித்துப் பூசிக்க 3 முறைமுயன்றும் தடையானது. ராசகலகத்தினுற் பழைய கோயிலழிந்து கிடப்பது இப்போதும் காணப்படும்,

பின்பு வேலப்பமணியத்தின் சொப்பனத்திலும், தென் னிந்தியா விலிருந்து வந்து, வில்லூன்றிப் பகுதியிற் காணி வாங்கிக் கமம் செய்வித்து மாவலிகங்கைக் கரையிலே அகத்தியராற் பூசிக்கப்பெற்று, நெடுநாட் பூசனையின்றி இருந்தவிநாயகரை தமது வயல் நிலத்தில் ஆலயமமைத்து அதில்வைத்துப் பூசித்திருந்த பிரமஸ்ரீ வைரவநாதக் குருக் களின் சொப்பனத்திலும், பெருமான் பணித்தபடி, அவர் களும் ஷை வைரவநாதக் குருவின் சுற்றத்தினரான சுப் பையர் விசுவநாதபட்டர் ராமநாதபட்டர் என்பவர்களும் சேர்ந்துயோசித்து (ஆயிரத்துத்தொண்ணூற் ருென்பதாம் ஆண்டுசாதனமூலமாக, ஷைபிராமணர்கள்நிலங்கொடுத்து, இவர்களும் கரையூரவர்களும் சேர்ந்து கர்ப்பக்கிருகம். அர்த்தமண்டபம் என்னும் இருமண்டபங்கட்டி விநாய கரை அர்த்த மண்டபத்திற் பிரதிஷ்டை செய்து.) இம் மூர்த்திகளை (மூலஸ்தான) கர்ப்பக் கிருகத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். பிரதிஷ்டையானகாலத்திலே பிரசித்திபெற்ற ஸ்ரீ கதிரவேலு முதலியாரென்னும் செல்வப்பிரபு, இம்மூர்த் திகட்குரிய திருவாபரணங்களையும் 2 தோட்டங்களையும் ஒரு கிட்டங்கியையும் கொடுத்தார். சாதன மூலமாக ஆல யத்துக்கு நிலம் கொடுத்த உரிமைப்படி பாரம்பரியமாக

வரவு, செலவு நித்திய நைமித்திகம் நடத்திப் பூசித்து வரும் பிராமணர்களும், கதிரவேலு முதலியாரின் சந்ததியாரும், வேலப்பமணியத்தின் சந்ததியாரும் மனேச்ஜராகக் கோவிற்காரியங்களை நடத்திவருகிறார்கள். பிராமணர்களாலும் ஊரவர்களாலும் மற்றும் மண்டபங்கள் முதலிய திருப்பணிகள் காலந்தோறும் நிறைவேறலாயின. அர்த்த மண்டபத்திலிருந்த விநாயகருக்கும் நிருதி (தென்மேற்கு)ப் பக்கத்தில் தனியே ஆலயமைத்துப் பிரதிஷ்டை நிறைவேறியது. மற்றும் தண்டபாணி, நாகேஸ்வரர், பைரவர், சூரியன் நவக்கிரகம் முதலியபரிவார ஆலயங்கள் அமைத்து மூர்த்திகளும் பிரதிஷ்டை ஆயிற்று.

கருணாநிதியாகிய இச்சண்முகப் பெருமானுடைய ஆறு ஊஞ்சற் கவிகள், சண்முகப்பெருமான் திருவருள் பெற்று வரகவியாய் விளங்கிய பிரம ஸ்ரீ சு. கார்த்திகேயக் குருக்களின் வாக்காக வழங்கின பின் மிகுதி ஐந்து கவிதையும் எச்சரிக்கை, முதலியவற்றையும் எமது மாதாமகர் (பேரனார்) புலோலி வித்வாம்சர் பிரமஸ்ரீ ம. முத்துக்குமார சுவாமிக்குருக்களவர்களைக் கொண்டு, பாடுவித்து. எமது தந்தையார் பிரம ஸ்ரீ வை. இராமலிங்கக்குருக்களவர்கள், கர்ணபாரம் பரியமாகவழங்கியதும் முன்னோர் பிரதியிற்கண்டதுமான இச்சரித்திரத்தையும் தொகுத்துச் சேர்த்து (1914 ம் ஆ) ஆனந்தவர்ஷத்திலே அச்சிடுவித்தார்கள். அப்பிரதிகள் செலவானமையால் அன்பர்கள் பலர் கேள்விப்படி இப்போது அச்சிட்டுவித்தோம்.

இங்ஙனம

இ. கு. பூர்ணானந்தேசுவரக்குருக்கள்

பூ. கு. சிவசுப்பிரமணியக்குருக்கள்

# ஊஞ்சல்

சீர்பூத்தகனகவரைச் சிகரத் தோன்றுந்
திரிகோணமலையுளவில் லூன்றிவாழு
மேர்பூர்த்த வள்ளி தெய்வயானைபாக
மிசைந்திடு சண்முகப் பரனல் லூஞ்சல்பாடக்
கார்பூத்தது திக்கையொரு கோட்டிரண்டு
கன்னமுமிழ் மும்மதநாற்புய நால்வாய்க்கோ
ணேர்பூத்தகய முகத்து விநாயகேச
னிமலர்மலர்த்தாளிணைகணினைதல் செய்வாம்.

பணமணி கொளரவரசுகால் களாகப்
பரந்த கடலுலகமது பலகையாக
வணிதிகழ்நால் வேதமவை விட்டமாக
வருணர விமதியுடுக் கோள்விதானமாகக்
குணமருவுமாக மாசாத்திரங்களோடு
குலவு சிவபுராணங்கள் கயிறதாக
மணிவளர் தென்றிரி கோணமலைவில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரேயா டீருஞ்சல்.

சந்திரராதவர் தவளக்குடை நிழற்றச்
சமீரணர் வெண்கவரி புடைபெயரவீச
விந்திரன் வெள்ளிலை துவர்க்காயடைப்பையேந்த
யமனிருதி துதிசொல்புகழினிது கூறத்
தந்திரநாயகன் வீரவாகு வென்னுந்
தம்பியுடைவாள் கொடுசார்ந்தயலினிற்க
மந்திரநேந்திரி கோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முக ரேயாடீருஞ்சல்.

தங்கவரத்னமணித் தண்டையாடத்
தமனியவம் பரிபடைசாருடைவானாட
வங்கணரைஞாணோடு சதங்கையாட
வகன் மார்பிலார ருபவீதமாடத்
துங்கமுறுவேலாடப்படைகளாடச்
சூரனைவென்றணி மவுலிவாகையாட
மங்கலமார்திரிகோணமலை வில்லூன்றி
வளநகர்வாழ் சண்முகரேயா டீரூஞ்சல்.

கனகமணியணி திகழ்மாமவு லிமின்னக்
கமலமலரனையமுகங் கருணைகாலத்
தினகரனை நகுகுழைக்குண்டல மிலங்கத்
திருப்புயங்கள் செச்சையந்தார் வாசம்வீசப்
பனகமணிப் பணியாடவலயமாடப்
பாவையர்களிரு பாலும்மகிழ் விருட
வனமுறுதென்றிரி கோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரேயா டீரூஞ்சல்.

வட்டமணித்தவின் முரசஞ்சங்கமேங்க
வரிசையுள நாகசுரம் வயங்கியோங்கத்
திட்டமுள வீணைவிதமிசை கடாங்கச்
சீருடைமத்தள தாளமினி மைவீங்க
இட்டமுறுந்தித்தியினி தோசைவாங்க
வேணையபல்லிய விசையுமினிதுதேங்க
மட்டமர் தென்றிரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரேயாடீரூஞ்சல்.

நலமருவுசூரர் பொழி பூமாரிவீழ
நயமருவுமன்பர் குழாநயந்து சூழ
வலமருவுமாலயனே முதலோர்தாழ
வரமருவு முனிவர் மகிழ்வுததியாழக்
குலமருவு கொடியிடையார் மருங்குவாழக்
கூர்மருவுவேலிஞெளி திமிரம்போழ
மலர்மருவு திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரே யாடீரூஞ்சல்.

உருமேவுமடியருள மன்புகூர
வெளிமேவு கைகள் சிரமீதுசேரக்
கருமேவு பிறவியெனுங் கடல்கடூரக்
கருதரியமெய்ஞ்ஞான மலர்ந்து சாரத்
திருமேவுமானந் தவருவி சோரத்
தெருண் மேவுதுதிமொழிகள் பொலிவினூர
மருமேவு திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரேயா டீரூஞ்சல்.

வீங்குமராமாலையரேயா டீரூஞ்சல்
விழையருளின் வேலையரேயா டீரூஞ்சல்
ஓங்குதெய்வயானையரேயா டீரூஞ்சல்
உயரமரர் சேனையரேயா டீரூஞ்சல்
பாங்குள பன்னிரு தோளீரா டீரூஞ்சல்
பதுமமலர் நிகர்தாளீரா டீரூஞ்சல்
வாங்குபுகழ்த் திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ் சண்முகரேயா டீரூஞ்சல்.

செந்திரு மாதிருமருகீரா டூஞ்சல்
செஞ்சடையான்தரு முருகீராடூஞ்சல்
உந்தியசீரெழிலுடையீரா டூஞ்சல்
உன்னுதாருளத் தடையீரா டூஞ்சல்
புந்தியினர்க்கருள் வரத்தீரா டூஞ்சல்
புகரிலையவேற்கரத் தீரா டூஞ்சல்
மந்திரமார் திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரேயா டூஞ்சல்.

ஆதிகுகனருள் வாரியடியர் வாழி
யாறுமுகமாறிரண்டு கரங்கள் வாழி
சோதிவடி வேல் வாழிபடைகள் வாழி
தோகைதெய்வயானை குறமாது வாழி
நீதியுளமயில் சேவல் தகரும் வாழி
நியதிமறையா கமங்கள்சைவம் வாழி
வீதிதிகழ்திரி கோணமலையும் வாழி
வில்லூன்றி வளநகரும்வாழி வாழி.

---

## பராக்கு.

சீரார் வில்லூன்றி நகர்த்தேவேபராக்கு
தேவகுஞ்சரி நாதசேயே பராக்கு
ஏராறுமாறு முகத்தெந்தாய் பராக்கு
இந்திரற்குவானுலக மீந்தாய் பராக்கு
சூராகுமயிலேறு தோன்றல் பராக்கு
தோமிலாக் கோழியுயர்துவசா பராக்கு
வாராருமுலையுமைதன் மகனே பராக்கு
வள்ளிமிலைசயா சைவளர் மகிபா பராக்கு
தாராரிராறு புயத்தலைவா பராக்கு

தண்ணளி மிகுந்தருள் செய்சாமீ பராக்கு
காரார்களன்றந் தகர்த்தா பராக்கு
கருணைமாகடலாகுங்கந்தா பராக்கு
ஏராரும் வெற்றி வேலிறைவா பராக்கு
இமையவர் முனீந்திரருக்கினியாய் பராக்கு
பேராருமடியருளம் பிரியாய் பராக்கு
பேணுதவர்க்கணுகாப் பெரியாய் பராக்கு
பாருருங் கோணமலைப் பரமா பராக்கு
பல்குபுகழ் வில்லூன்றிப் பாலா பராக்கு.

## எச்சரிக்கை.

பவபந்த நிக்ரகசின் மயபரனே யெச்சரிக்கை
பல்லாயிரங் கதிர் நேரும் வேற்கரனே யெச்சரிக்கை
தணிகாசலத் தமர்வேற்குணமலையே யெச்சரிக்கை
சந்தார் தடம்புயனே யெங்கள் கந்தா வெச்சரிக்கை
அடியார்க்கருள் வடிவேற்கை யெம்மையா வெச்சரிக்கை
அத்தாபரிசுத்தா வெங்கணித்தா வெச்சரிக்கை
சுரராஜகன்னிகை நாயகசுவாமீ யெச்சரிக்கை
சொல்லா மறைவல்லார் தொழுசுவாமீ யெச்சரிக்கை
கும்போற்பவன்றனையாள னுகூலா வெச்சரிக்கை
கோலாகமயில் வாகனவேலா வெச்சரிக்கை
வடிவேற் கரகுகனே சுப்ரமண்யா வெச்சரிக்கை

வானார்விழிக்குறமான் மணவாளா வெச்சரீக்கை
சூர்மாவடுதீரா குகப்பேரா வெச்சரீக்கை
சோதீயெங்களா தீயருட்டோன்று லெச்சரீக்கை
த்வைமாதுரஞானைமங்கரன் றணைவா வெச்சரீக்கை
தோலாவலியுள வாரணத்துவசா வெச்சரீக்கை
நாலாமறை வடிவாகியசிலா வெச்சரீக்கை
நக்கீரர் சொற்கிரங்கு மனுகூலா வெச்சரீக்கை
கதிர்காமநன்னகர் மேவியகந்தா வெச்சரீக்கை
கங்காசுதமழு வேந்திதன்மைந்தா வெச்சரீக்கை
சேலார்விழியிமவான்மகள் பாலா வெச்சரீக்கை
சிறியேன்கவிக்கிரங்கு மனுகூலா வெச்சரீக்கை
வேலா திரிகோணமலைமேலா வெச்சரீக்கை
கில்லூன்றிநன்னகர் மேவருள் விரதாவெச்சரீக்கை.

---

# லாலி.

சச்சிதானந்த குகலாலிலாலி — லோக
 சர்வஜனரக்ஷகனே லாலிலாலி
பச்சைமயில் வாகனனேலாலிலாலி — சிவ
 பாலகனே வேலவனேலாலிலாலி
பர்வதகுமாரிசு தலாலிலாலி — எங்கள்
 பரமகருணாநிதி யேலாலிலாலி
சர்வபரிபூரணனே லாலிலாலி — உயர்
 சரவணதடோற்பவனே லாலிலாலி
முத்தியருள் மாமுருகலாலிலாலி — யார்க்கும்
 மூவாமுழுமுதலேலாலிலாலி.

சத்தியுருமாமுதவேலவாலிலாலி — பர
தத்துவாதீதசுரலாலிலாலி
போதகுணசாகரனேலாலிலாலி — சுர
புங்கவனே சண்முகனே லாலிலாலி
மேதகையசிவகுருவே லாலிலாலி — வர
வில்லூன்றிநாயகனேலாலிலாலி

---

## மங்களம்.

மங்களம் மங்களம் மங்களம் — ஜெயஜெய
மங்களம் மங்களம் மங்களம்.

சங்கரனார் மைந்தருக்குச் சர்வசனரக்ஷகர்க்கு
பங்கயப்பொற்பாதருக்குப் பாலசுப்ரமண்யருக்கு-மங்களம்

ஆறுமுகவேலருக்கு ஆறிரண்டு தோளினர்க்கு
வீறுமயில்வாகனர்க்கு மேலருள்செய் சீலருக்கு - மங்களம்

தெய்வமகளுயகர்க்குச் செல்வவள்ளிகாந்தருக்கு
சைவரைரக்ஷிப்பவர்க்குத் தக்ககருணாலயற்கு — மங்களம்.

கோணமலை வில்லூன்றிக்கோயில்வளர் நேயருக்கு
காணவருண்மேவி வளர்கருணா கடாக்ஷருக்கு — மங்களம்.

---